விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 மாசி 10 ஷஃபான் 6 இதழ்: 12

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 22-2-1991

## முஸ்லிம் ஊர்காவல் படையை கலைக்குமாறு கோரிக்கை

[கொழும்பு]

முஸ்லிம் ஊர்காவல் படையை உடனடியாகக் கலைக்குமாறு அரசுக்கு வற்புறுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த செப்டம்பரில் மாத்திரம் கிழக்கு மாகாணத்தில், முஸ்லிம் ஊர்காவல் படையினர் 300க்கும் மேற்பட்ட கொலைகளையும், 208 தமிழர்களைக் கடத்தியும், நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ப்பெண்கள் மீது பாலியல் வன்முறையை மேற்கொண்டும், (4ம் பக்கம் பார்க்க)

## சுக்ளா உட்பட 5 அமைச்சர்கள் ராஜினாமா

(புதுடில்லி)

இந்தியா வெளியுறவு அமைச்சர் திரு. வி. சி. சுக்ளா உட்பட ஐந்து அமைச்சர்கள் தமது பதவிகளை கடந்த செவ்வாய்க்கிழமை ராஜினாமா செய்துள்ளார்கள்.

(4ம் பக்கம் பார்க்க)

## ● எம். பி. தாக்கப்பட்டதன் எதிரொலி

# பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்க எதிர்க்கட்சிகள் முடிவு!

(கொழும்பு)

பாராளுமன்றத்தைக் காலவரையறையின்றிப் பகிஷ்கரிக்கப்போவதாக எதிர்க்கட்சிகள் நேற்று முடிவு செய்துள்ளன.

நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலரைத் தாக்கியதை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

ஒரு பிரச்சினையின்போது துணைச்சபாநாயகரின் தீர்ப்பை எதிர்த்து நவசமசமாஜக் கட்சி உறுப்பினர் திரு. வாசுதேவ நாணயக்கார சபாநாயகரின் ஆசனத்தில் போய் அமர்ந்த போது அவரை ஐக்கியதேசியக் கட்சி உறுப்பினர்கள் கீழே தள்ளி விழுத்தினார்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இன்று ஓய்வூதியம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

டிசம்பர் மாதத்திற்குரிய ஓய்வூதியம் இன்று வெள்ளிக்கிழமை இலங்கைவங்கி யாழ். கிளையில் பணமாக வழங்கப்படும்.

## ஐ. நா. செயலாளருக்கு கொலைப் பயமுறுத்தல்!

(லீமா)

ஐ. நா. செயலாளர் திரு. பெரஸ் டி கியூலருக்கு கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

வளைகுடாப் போரில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷின் விருப்பத்துக்கிணங்கவே ஐ. நா. செயலாளர் செயல்பட்டுவருகிறார் என 'மாஓவாதக்குழு' தெரிவித்துள்ளது.

''ஐ. நா. செயலர் நியூயோர்க்கிலேயே தங்கியிருக்க

(4-ம் பக்கம் பார்க்க)

## மட்டுநகரில் தமிழ் பயணிகள் உயிருடன் எரிப்பு 26 பேர் கடத்தப்பட்டனர்

(மட்டுநகர்)

மட்டுநகரில் மினிபஸ்ஸில் பயணம்செய்த தமிழ் பயணிகள் மீது முஸ்லிம்கள் நடத்திய தாக்குதலில் ஐவர் கொல்லப்பட்டனர். 26 பிரயாணிகள் கடத்தப்பட்டனர்.

நேற்றுப் பகல் மட்டுநகரை நோக்கிவந்த மினிபஸ்ஸை முஸ்லிம்கள் வழிமறித்துத் தீயிட்டுக் கொளுத்தியதுடன் பிரயாணிகளை நோக்கி துப்

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து ஜனாதிபதியின் உரையை 16 எதிர்க்கட்சிகள் புறக்கணித்தன

(புதுடில்லி)

தமிழக அரசு கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்று நடாளுமன்றில் நடைபெற்ற ஜனாதிபதி வெங்கட்ராமன் உரையை 16 எதிர்க்கட்சிகள் புறக்கணித்துள்ளன.

பாரதீய ஜனதாக்கட்சி, ஜனதாதள், இடதுசாரிக்கட்சிகள் உட்பட 16 கட்சிகள் புறக்

(4ம் பக்கம் பார்க்க)

## வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

கட்டுவன் பகுதியில் நேற்று விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில், இராணுவத் தரப்பில் சேதமேற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

மேற்படி மோதலில் புலிகள் தரப்பில் ''தர்சன்'' (ஆண்டி ஜீவா, திருமலை) வீரமரணம் அடைந்தார். (வி)

## இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு இந்தியா மீண்டும் வலியுறுத்து

[புதுடில்லி]

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதியான வழிகளில் அரசியல் தீர்வு காண்பதற்கு இலங்கையை இந்தியா வலியுறுத்தி வருவதாக இந்திய ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற வரவு-செலவுத் திட்ட கூட்டத்தொடரில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக பேரவைக்கு புதிய உறுப்பினர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப்பேரவைக்குபுதிய உறுப்பினர்கள் எட்டு பேர் அண்மையில் பல்கலைக்கழக மானியக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ். பல்கலைக்கழக பேரவையின் புதிய அங்கத்தவர்களின் விபரம் வருமாறு:

திரு. ஏ. சோமசுந்தரம் பிள்ளை, திரு. எஸ். சிவபாலசுந்தரம், திரு. வே. தேவசிகாமணி, கலாநிதி என். சின்னராஜா, திரு. ஏ. ஜே. செந்தில்நாதன், திரு. ஆர். சுந்தரலிங்கம், திரு. அன்ரன் அப்பிரப், டாக்டர் எஸ். சிவகுமாரன்

(4ம் பக்கம் பார்க்க)

## தமிழ் எம். பிக்களின் காவலர்களை காணவில்லை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள தமிழ்க் குழுக்களைச் சேர்ந்த சில பாராளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப்பாதுகாவலர்கள் காணாமல் போயுள்ளதாக அல்லது கடத்தப்பட்டுவிட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர். எல். எவ். எம். பி.களின் மெய்ப்பாதுகாவலர்களே அனேகமானோர் இவ்

(4-ம் பக்கம் பார்க்க)

## சிவில்உரிமை அமைப்பிற்கு சர்வதேச விருது

(கொழும்பு)

இலங்கையில் செயல்படும் 'சிவில் உரிமை அமைப்புக்கும்' குவாட்டமாலா மனித உரிமைக் குழுவுக்கும் இணைந்த

(4-ம் பக்கம் பார்க்க)

# பண்ணை தாம்போதியை திருத்த அழைப்பு

(வேலணை)

தீவுப் பகுதியில் இடம்பெற்ற ஸ்ரீலங்கா இராணுவ நடவடிக்கைகளின்போது சேதமாக்கப்பட்ட பண்ணை தாம்போதி வீதியை மீண்டும் திருத்தி அமைத்து போக்குவரத்திற்கு உகந்ததான முறையில் செய்வதற்கு சிரமதான அடிப்படையில் வேலை செய்ய உடனடியாக தொண்டர் தேவைப்படுகின்றார்கள்.

கூட்டுறவுத்துறைகள் சனசமூக நிலையங்கள், பாடசாலைகள், மற்றும் பொது மன்றங்கள் பொதுமக்களினது உதவிகள் என்பன தேவைப்படுகின்றன: விரும்புவோர்கள் வேலணை உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு தங்களினது பங்களிப்புக்களை செய்ய முன்வருமாறு வேலணை உதவி அரசாங்க அதிபர் திரு: நா: தனபாலசிங்கம் கேட்டுள்ளார். (75)

## விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வெலிங்டன் தியேட்டர் முன்பாக இடம்பெற்ற மினிபஸ் வாகன விபத்தில் ஒருவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரியாலை கண்டிவீதியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவகுமார் (26 வயது) என்பவரே சைக்கிளில் சென்றுகொண்டிருக்கையில் இவ்விபத்து ஏற்பட்டுள்ளது; (56)

## கட்டுதுவக்கு வெடித்து காயம்

(யாழ்ப்பாணம்)

ஆனந்தபுரத்தில் குரங்கிற்கு இலக்கு வைத்தபோது பின்பக்கமாக கட்டுத்துவக்கு சீறி வெடித்ததினுல் கண்ணில் காயப்பட்ட ஒருவர் யாழ். போதனு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சுப்பிரமணியம் பிறேமதாஸா (22 வயது) ஆனந்தபுரம் புதுக்குடியிருப்பைச் சேர்ந்தவர் என்பவரே வலது கண் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுகின்ருர். (56)

## வரி விளம்பரம்

### தேவை

கழுவித் துப்பரவு செய்த அரைப்போத்தல் திரவம் கொள்ளக்கூடிய போத்தல்கள் தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ-1114)

### பாலர் கல்வி

பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி (1991-03-02) ஆரம்பமாகும். க. பொ. த. (சா/த) சித்தி முக்கியம். நேரில் வர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். முகவரி: பாலர் ஆசிரியர் சங்கம் மே/பா உயர்கல்விக்கல்லூரி 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம். (சி-4375)

## ஓய்வுபெற்ருர்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட சமூகசேவை திணைக்களத்தைச் சேர்ந்த சிரேஷ்ட சமூகசேவை உத்தியோகத்தர் அ. இராமநாதன் சேவையிலிருந்து அண்மையில் ஓய்வுபெற்றுள்ளார். (153)

## சிரமதானம்

[யாழ்ப்பாணம்]

வலி- தெற்கு பிரதேச சபையினுல் கொண்டாடப்படும் சுகாதாரவாரத்தை முன்னிட்டு ஏழாலை லெனின் சனசமூக நிலையத்தினுல் ஏழாலை ஆலங்கட்டு மயானம் சிரமதானமூலம் துப்பரவு செய்யப்பட்டது.

ஏழாலை கிராம அபிவிருத்திச் சபையின் ஆத்திகட்சகர் திரு. த. மகாசிவத்தின் மேற்பார்வையில் இச்சிரமதானம் நடைபெற்றது.

இதே வேளை ஏழாலை லெனின் சனசமூக நிலைய ஆதரவில் இயங்கும் அறவழி நல்லொழுக்க சிறுவர் கழகம் நிலைய சுற்றாடலையும், முடிமன்னர் ஆலய சுற்றாடலையும், சிவகுருவீதியையும் நிலையவாழ் மக்களுடன் சேர்ந்து சிரமதான மூலம் துப்பரவு செய்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 250 முகாம்களில் ஒன்றேகால் லட்சம் அகதிகள்

(சென்னை)

"இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் தமிழக அரசு செய்துகொடுக்கும். அதே வேளையில் தீவிரவாதம் எந்த ரூபத்தில் வந்தாலும் அவை அடியோடு ஒழிக்கப்படும்".

தமிழக ஆளுநர் திரு. பீஷ்மர் நாராயணசிங் நேற்று முன்தினம் மண்டபம் முகாமில் அகதிகள் மத்தியில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் உரையாற்றுகையில்; இலங்கை தமிழ் அகதிகளுக்காக மத்திய மாநில அரசுகள் இதுவரை 16கோடி 50 லட்சம் ரூபா செலவிட்டுள்ளனவென்றும் 250 அகதிகள் முகாமில் 1 லட்சத்து 22 ஆயிரம் அகதிகள் பராமரிக்கப் படுவதாகவும் இவ்வகதிகளைப் பராமரிப்பதில் நிதி ஒருதடையாக இருக்க மாட்டாதெனவும், எந்தவித தளம்பல் நிலையும் ஏற்படமாட்டாது எனவும் தெரிவித்தார். (க)

## சீனிப்பாணி தயாரிக்கத்திட்டம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்குப் பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் பனம்சீனி தயாரிப்பதற்கான திட்டம் ஒன்றை விரைவில் செயல்படுத்தவுள்ளது.

பதநீரிலிருந்து கருப்பட்டி உற்பத்திசெய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக மேற்படி சங்கப் பொதுமுகாமையாளர் திரு. செல்வராஜ் தெரிவித்தார். (72)

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நிர்வாக சேவையிலிருந்து ஓய்வுபெற்ற திரு. அருணாசலம் மகாதேவா யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தராக உபவேந்தர் அ. துரைராசாவினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னுள் யாழ்ப்பாணம் உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரான இவர் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராகவும் பணிபுரிந்தவர். தற்பொழுது கூட்டுறவு வேலை ஆணையாளர் ஆணைக்குழுவின் மேன் முறையீட்டு விசாரணை உத்தியோகத்தராகக் கடமையாற்றி வருகிருர்.

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யோகக்கலையில் டாக்டர் பட்டம் பெற்றமைக்காக தொழில் அதிபர் க. கனகராசாவை பாராட்டி அறவழிப் போராட்டக்குழு கௌரவிப்பு விழாவொன்றை நடாத்தவுள்ளனர்.

இம்மாதம் 25-ம் திகதி அறவழிப்பணி மனையில் திரு. கே. கோபாலகிருஷ்ணன் தலைமையில் இந்த விழா நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பலபிரமுகர்கள் கலந்து கொண்டு தொழிலதிபரின் சேவையைப் பாராட்டவுள்ளார்கள்.

## புதிய ஸ்தானிகர்கள்

(கொழும்பு)

நியூஸிலாந்தும், ஆர்ஜன்டீனுவும் தமது புதிய ஸ்தானிகர்களை இலங்கைக்கு நியமித்துள்ளன.

மேற்படி இருநாட்டு ஸ்தானிகர்களும், நேற்று ஜனதிபதி ஆர் பிரேமதாசாவிடம்தமது நியமனக்கடிதங்களைக் கையளித்துள்ளனர். (வி)

## சீனப் பிரதமர் வேண்டுகோள்

(பீக்கிங்)

வளைகுடாப் பிரச்சனை மேலும் தொடராமல் இருக்கும் வகையில் குவைத்தில் நிலைகொண்டிருக்கும் ஈராக்கிய படைகள் உடனடியாக வாபஸ் பெறப்படவேண்டும் என சீனப்பிரதமர் திரு. லிபெங் ஈராக்கியதணைப்பிரதமர் திரு. சதும் சமாதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (கி)

## பங்கீட்டு அட்டை வழங்கப்படவில்லை

(பளை)

பளைப்பகுதி மக்களுக்கு உலர் உணவுப் பொருள் பங்கீட்டு அட்டை வழங்கப்படாததால் தற்போது வருமானம் கூடியோர் பணம் கொடுத்து பொருட்கள் வாங்க முடியாத நிலையில் உள்ளனர்.

## விஞ்ஞான ஆசிரியர் கழகம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள கல்விகோட்டங்களைச் சேர்ந்த விஞ்ஞான கணித ஆசிரியர்கள் விஞ்ஞான ஆசிரிய கழகங்களை கோட்டங்கள் ரீதியில் அண்மையில் அமைத்துள்ளார்கள்.

கோட்டங்கள் ரீதியில் விஞ்ஞான தினம். மாணவர்களுக்கிடையே கருத்தரங்குகள் சஞ்சிகைகள் வெளியிடுதல், விஞ்ஞான உபகரணங்களைச் செய்தல், தாவரவியல் பூங்கா அமைத்தல் ஆகிய பணிகளை மேற்படி கழகங்கள் செய்யவுள்ளன. (153)

## சாரணர் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

கைதடிசெவிப்புலவிழிப்பிழந்தோர் நவீல்ட் பாடசாலையின் அண்மையில் பளைமகா வித்தியாலய சாரணர் குழு சிரமதான பணியை மேற்கொண்டது. இச்சிரமதான பணி உதவி சாரணஇரியர் திரு. சி. விக்கினேஸ்வரன் தலைமையில் நான்கு அணிகளாக பிரிந்து இடம் பெற்றது. குழுத் தலைவர்கள் ம. சாந்தீபன், பு. காண்டீபன், ஜெ. கருணா, மூ. சித்திரவேல் ஆகிய அணித்தலைவர்களின் கீழ் நடைபெற்றது.

இதனை கிளிநொச்சி மாவட்ட சாரண ஆணையாளர் திரு. க. கோபாலகிருஸ்ணன் பார்வையிட்டார் இதில்23 சாரணர்கள் இரண்டு நாள் சிரமதான பணியில் ஈடுபட்டிருந்தார்கள்.

## இலங்கை வங்கியில் நாளை நிவாரணக் கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி ஸ்ரான்லி வீதிக்கிளையில் நாளை சனிக்கிழமை வண்ணார்பண்ணை வடமேற்கு, வண்ணார்பண்ணை வடகிழக்கு, சுந்தர்மடம் ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு முன்னர் பெயர்குறிப்பிடப்பட்டு எடுக்கத் தவறியவர்களுக்கு பின்வரும் கொடுப்பனவுகள் வங்கிக் காசோலையாக வழங்கப்படும்;

மீளக்குடியமர்தல் 2ம் கட்ட நிவாரணம் ரூபா 1000/- ஜே/49 வண். வடமேற்கு (54 குடும்பங்கள்), ஜே/50 வண். வடகிழக்கு (32 குடும்பங்கள்), ஜே/51 சுந்தர்மடம் (66 குடும்பங்கள்);

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நன்கொடைப்பணம் ரூபா 4000/- ஜே/49 வண். வடமேற்கு (59 குடும்பங்கள்) ஜே/51 சுந்தர் மடம்).

இதேவேளை முன்னர் சாவகச்சேரி இலங்கை வங்கிக்கிளையில் ரூபா 4000/-, ரூபா 1000 கொடுப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டு அதைப்பெறத்தவறியவர்களுக்கு உரிய அத்தாட்சிப் பத்திரங்களுடன் நாளை சனிக்கிழமை வழங்கப்படவுள்ளது.

இதில் 4000 ரூபா பெறுபவர்கள் 100 பேரும், 1000ரூபா பெறுபவர்கள் 90 பேருக்கும் மட்டுமே இப்பணம் காசோலையாக வழங்கப்படும். (153)

## மத்தியஸ்தர் சங்கப் புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்: உதயபத்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் யாழ். நகரில் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்;

தலைவர்: கே. ஐதுகுலசிங், காரியதரிசி; ஏ. தேவராசா, உபதலைவர்கள்: கே. எஸ். வை. மொறிஸ், எம்: டீ: தம்பிராசா, ஏ. செபஸ்தியாம்பிள்ளை, எஸ் அண்ணுத்துரை, வி. திருஞானசம்பந்தர், தனதிகாரி, டி. ஏ. எம். குணசிங்கம், உபகாரியதரிசி; எம். பிரான்சிஸ்.

கிளிபேட் அன்ரனிப் பிள்ளை பி ஆர்: தம்பிநாயகம், ஜி. எம். செபஸ்தியாம் பிள்ளை, ரி. கருணாகரன், எஸ். கே. செபஸ்தியாம் பிள்ளை, கே; எஸ்? குணசிங்கம் ஆகியோரும் நிர்வாக அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்; (வி)

## இலவச மிளகாய் கன்று

(சித்தன்கேணி)

சங்கானை பொது நூலகத்தில் இலவசமாக மிளகாய் கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன.

சங்கானை பொதுநூலகப் பொறுப்பாளர் திரு. எஸ். கணேசு இலவசமாக பொது மக்களுக்கு மிளகாய் கன்றுகளை விநியோகிக்கின்ருர். இவரது சேவையை பலரும் பாராட்டுகின்றனர். (187)

## ★ யாழ். மாவட்டத்திற்கு

# கிராமிய வீடமைப்புத் திட்டம்; 24½ லட்சம் ரூபா ஒதுக்கீடு

[சித்தன்கேணி]

யாழ். மாவட்டத்திற்கு இந்த ஆண்டு கிராமிய வீடமைப்புத்திட்டத்திற்கு 24 லட்சத்து 63 ஆயிரம் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் கிராமிய வீடமைப்புத் திட்டத்திற்கு கடனுதவி வழங்குவதற்கு 13 உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவிற்கும் மொத்தமாக 24 லட்சத்து 63 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முன்பு வழங்கப்பட்ட கடனில் இருந்து அறவிடப்படும் பணத்தில் 3 லட்சத்து 56 ஆயிரம் ரூபாவும், புதிதாக 21 லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 24 லட்சத்து 63 ஆயிரம் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி உ. அ. அ. பிரிவிற்கு 1 லட்சத்து 64 ஆயிரம் ரூபாவும், கோப்பாய் உ. அ. அ. பிரிவிற்கு 2 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபாவும், நல்லூர் உ. அ. அ. பிரிவிற்கு 1 லட்சத்து 11 ஆயிரம் ரூபாவும், வேலணை உ. அ. அ. பிரிவிற்கு 1 லட்சத்து 46 ஆயிரத்து 500 ரூபாவும், ஊர்காவற்றுறை உ. அ. அ. பிரிவிற்கு 1 லட்சத்து 46ஆயிரத்து 500 ரூபாவும், நெடுந்தீவு உ. அ. அ. பிரிவிற்கு 22 ஆயிரம் ரூபாவும், தெல்லிப்பழை உ. அ. அ. பிரிவிற்கு 2 லட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபாவும், உடுவில் உ. அ. அ பிரிவிற்கு 2 லட்சத்து 22 ஆயிரம் ரூபாவும், சண்டிலிப்பாய் உ. அ. அ. பிரிவிற்கு 2 லட்சத்து 18 ஆயிரம் ரூபாவும், சங்கானை உ. அ. அ. பிரிவிற்கு 1 லட்சத்து 83 ஆயிரம் ரூபாவும், பருத்தித்துறை உ. அ. அ பிரிவிற்கு 74 ஆயிரத்து 500 ரூபாவும், கரவெட்டி உ. அ. அ. பிரிவிற்கு 2 லட்சத்து 37 ஆயிரம் ரூபாவும், மருதங்கேணி உ. அ. அ. பிரிவிற்கு 58 ஆயிரம் ரூபாவும் மொத்தமாக 21 லட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த கிராமிய வீடமைப்புத் திட்டக் கடன்கள் யாவும் ஐக்கிய நாணய சங்கங்களின் மூலம் வழங்கப்படவுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

## இராசி பலன்

22-02-1991

வெள்ளிக்கிழமை

மேடம்- கடமை தவறுதல், மனவேதனை, வீண் வம்பு. அலைச்சல்.

இடபம்- தொழில் முயற்சி, இனசனவருகை, குடும்ப சந்தோஷம்.

மிதுனம்- நரம்புப் பெலவீனம், அதிகாரிகள் தொல்லை தொழில் நஷ்டம்.

கடகம்- புதியஉறவு, காரிய வெற்றி, வாக்கு வன்மை, புகழ்.

சிங்கம்- அபார சாதனை, குடும்பசுகம், வீண்செலவு, புத்திரர் பெருமை.

கன்னி: வீண் யோசனை, அந்நியர் தலையீடு, தெய்வீக செலவு.

துலாம்- சிறுவிபத்து, கடன் தொல்லை, அவசரமுடிவு, பகை மிகுதி.

விருச்சிகம்- தொழில் லாபம், பகை அகலும், சகோதர உதவி.

தனுசு- அற்ப நேசம், கருத்து மோதல், குடும்ப மகிழ்ச்சி.

மகரம்- வீண்பகை, காரிய அலைச்சல், மனக்குழப்பம்.

கும்பம்- படபடப்பு, அந்நியவாசம், கடிததொல்லை. அசதி.

மீனம்- பெரியார் ஆசி, பணவரவு, மன மாற்றம், புகழ்.

ஜோஸ்யர்

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் நீர் வழங்கலுக்கான அபிவிருத்தித் திட்டங்கள் என்ற தலைப்பில் கருத்தரங்கு யாழ். பல்கலைக்கழக கிளிநொச்சி விவசாய பீடத்தில் மார்ச் மாதம் 2-ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. (153)

## கல்வி அதிகாரிக்கு சாகித்திய மண்டலப் பரிசு

(யாழ்ப்பாணம்)

பிரபல குழந்தை இலக்கிய எழுத்தாளரும், கல்வி அதிகாரியுமான கவிஞர் க. துரைசிங்கம் சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்றுள்ளார்.

இவர் எழுதிய சிறுகதைப் பாடல்கள் என்னும் நூலுக்காகவே இப்பரிசில் வழங்கப்படுகிறது. 1989ம் ஆண்டில் சிறுவர் இலக்கியத்துறையில் மிகச்சிறந்த நூலாகக் குழந்தைப் பாடல்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

பல்வேறு சிறுவர் இலக்கிய நூல்களை வெளியிட்டுள்ள திரு. துரைசிங்கம் ஏற்கனவே 'பாலர் பாட்டு' நூலுக்காக இலங்கை இலக்கிய பேரவையின் முதற்பரிசினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

## ★ உலகம் முழுவதும்

# வறுமை, வன்முறையின் பிடியில் சிக்கித் தவிக்கும் 34 கோடி சிறுவர்கள்

### இவர்கள் எதிர்காலம் என்ன?

(நியூயோர்க்)

உலகில் இன்று 34 கோடி சிறுவர்கள் சகல வழிகளாலும் பாதிக்கப்பட்டு எதிர்காலம் கேள்விக் குறியாகியிருப்பதாக நியூயோர்க்கில் 70 நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபரங்கள் அடங்கிய புள்ளி விபரமொன்றும் அங்கு வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி 3 கோடி சிறுவர்கள் வீதியோரங்களில் வாழ்கிறார்கள். 5 கோடி சிறுவர்கள் பாதுகாப்பு. சுகாதாரமற்ற நிலையில் வேலை செய்கிறார்கள்; 10 கோடி சிறுவர்களுக்கு ஆரம்ப கல்வி கூட கிடைப்பதில்லை. 15 கோடி சிறுவர்கள் பசி பட்டினியால் வாடுகின்றார்கள். 70 லட்சம் சிறுவர்கள் உலகெங்கும் அகதிகளாகியுள்ளனர். 2 லட்சம் சிறுவர்கள் கட்டாய ராணுவ சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இவற்றைவிட சின்னம்மை, க்குவான், வலிப்பு நிமோனியா' வாந்திபேதி, நீர்வற்றுதல் போன்ற தடுக்கக்கூடிய நோய்களினால் பீடிக்கப்பட்டு நாளொன்றுக்கு ஆயிரக்கணக்கான சிறுவர்கள் மரணமடைகிறார்கள்,

மேலும் யுத்தங்கள், அரசியல் கலவரங்கள், குழப்பங்களால் தோன்றும் வன்முறைகளினாலும் சிறுவர்களின் மரணங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

ஆசியாவிலேயே இவ்வாறு சிறுவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர் போசாக்கின்மையால் வாழும் உலகச் சிறுவர்களில் அரைவாசிப் பேர் இலங்கை, ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற தெற்காசிய நாட்டு சிறுவர்களே ஆவார்கள். (ஜ)

## ★ வளைகுடா யுத்தம்

# 300 ஈராக் படைவீரர் பலி; 500 பேர் சரணடைந்தனர்.

(பாக்தாத்)

அமெரிக்காவின் நேசப் படைகள் நேற்று ஈராக்கின் எல்லையில் நடத்திய விமான தாக்குதலில் 300 ஈராக்கிய படை வீரர் கொல்லப்பட்டதுடன் 500 க்கும் அதிகமானோர் சரணடைந்தனர். 20-ஈராக் டாங்கிகள் முற்றாக சேமடைந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடைபெற்ற தாக்குதலில் இது மிகப் பெரிய தாக்குதல் எனக்கூறப்படுகிறது.

சரணடைந்த ஈராக்கிய வீரர்களை, 20 ஹெலிகாப்டர்களில் ஏற்றிகொண்டு வந்துள்ளதாக அமெரிக்க முப்படைத்தளபதி தெரிவித்தார்.

இதேசமயம் வளைகுடாவில் அமெரிக்க நேசப்படைகளின் இடைவிடாத குண்டுத்தாக்குதல்களால்ஈராக்கில் கொலரா. வயிற்றோட்ட நோய்கள் மிக வேகமாக பரவி வருவதாகக் கூறப்படுகின்றது. (வி)

### தமிழ் எம். பிக்களின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாறு காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அரச படைகளின் உடையணிவோருடன் வரும் தமிழ் பேசுபவர்களே கூடுதலாக இவ்வாறான கடத்தல்களில் ஈடுபடுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (கி)

### இனப்பிரச்னை

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம் பெறும் இராணுவநடவடிக்கை குறித்தும் அவர் தனது ஆழ்ந்த கவலையைத்தெரிவித்தார்.

### ஐ. நா. செயலாளர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும். அவர் வெளியிடங்களுக்குச் செல்வாராகில், அவரின் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது': என மேற்படி குழு விடுத்த கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வி)

### முஸ்லிம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கைதான 410 தமிழர்களைக் காணவில்லை என்றும் புள்ளி விபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

இவர்கள் அட்டகாசத்தனம் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (சி)

### சுக்ளா உட்பட

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எனினும் இவர்களின் பதவி துறப்பால் மத்திய அரசுக்கு பாதிப்பெதுவும் ஏற்படாதென்றும் பிரதமர் திரு. சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

பதவி துறந்த அமைச்சர்கள் வருமாறு: திரு. வி. சி. சுக்ளா, திரு. பாகி கோவர்த்தனம், ஜனப் சர்வார் ஹசைன், ஜனப் பாஹவதார் பாட்டேல். கட்சி தாவல் தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் எம். பி. பதவி இழந்ததும் தெரிந்ததே. இதேவேளை மேலும் மூன்று எம். பிக்களும் இச்சட்டத்தின் கீழ் எம். பி. பதவியை இழந்துள்ளனர்.

### சிவில் உரிமை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இயங்கும் 'சிவில் உரிமை அமைப்பு' ஜே.வி. பி. யின் நடவடிக்கையின்போது படையினரால் கொலைப்பட்ட, காணாமல்போன ஒரு லட்சம் பேரது விபரங்களைச் சேகரித்து இதனை அம்பலப்படுத்தியது.

'கார்ட்ட-மெனிகல்' என்ற இந்த விருது மேற்படி இரு அமைப்பிற்கும் இணைந்து வழங்கப்பட்டுள்ளது. (கி)

### எம். பி.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவரின் சேட் கிழிக்கப்பட்டது. கைக்கடிகாரம்உடைத்து நொருக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 20 நிமிடங்கள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கும் ஐ. தே. கட்சி உறுப்பினர்களுக்குமிடையே பலத்த கைகலப்பு ஏற்பட்டது.

ஒருவரை ஒருவர் மாறிமாறி தாக்கினார்கள்.

கிழிந்த சேட்டுடன் சபைக்கு வெளியே வந்த திரு. வாசுதேவநாணயக்கார 'தமிழ்நாடு சட்டப் பேரவையில்கூட இவ்வளவு மோசம் இடம்பெறவில்லை' என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார். (பூ)

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு, கல்லுண்டாய், செம்மணி உப்புக் கூட்டுத்தாபன வேலைத்திட்டங்களில் பணியாற்றிய தொழில்நுட்ப வியலாளர், உற்பத்தி முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் 23 ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. சகல பணியாளர்களும் சமுகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். [வி]

### மட்டு நகரில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாக்கிப்பிரயோகம் செய்த போது மூவர் கொல்லப்பட்டதாகவும் இருவரை உயிருடன் பஸ்ஸுக்குள் போட்டு எரித்ததாகவும் கூறப்படுகிறது.

12 பிரயாணிகள் பலத்த காயங்களுடன் மட்டுநகர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2-வது மினிபஸ் பிரயாணிகள் சாதுரியமாகத் தப்பிவிட்டனர். [வி]

### தமிழ் நாடு

(1ம பக்கத் தொடர்ச்சி)

கணித்தன.

இதேவேளையில் வரவு-செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்குப்பதிலாக இடைக்கால செலவினங்களுக்கான நிதிக் கொள்கையை மத்திய அரசு சமர்ப்பித்தமையை பாரதீய ஜனதாக்கட்சி புறக்கணித்துள்ளது. (க)

### யாழ். பல்கலைக்கழக

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பல்கலைக்கழக பேரவை முதலாவது கூட்டம் மார்ச் மாதம் 14ம் திகதி காலை நடைபெறவிருக்கிறது. (153

## மரண அறிவித்தல்

### திருமதி மார்க்கண்டு பரமேஸ்வரி

தச்சன்தோப்பைச் சேர்ந்த திருமதி மார்க்கண்டு பரமேஸ்வரி இறைவனடி எய்திவிட்டார்.

இவர் மார்க்கண்டுவின் அன்புத் துணைவியாரும் சிவனேசன் (ஜேர்மனி), சிவலலிதா, சிவமோகன் (கொழும்பு) சிவதாசன், சிவசுந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், வல்லிபுரம் - தெய்வானையின் அன்பு மகளும் பரமு-லட்சுமியின் அன்பு மருமகளுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் தச்சன்தோப்பில் உள்ள அவரது இல்லத்தில் நாளை சனிக்கிழமை (23 – 02 – 91) காலை 10-00 மணிக்கு நடைபெற்று தகனக்கிரியைக்காக பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

தகவல்: ப. மார்க்கண்டு,
தச்சன்தோப்பு.

[சி-4376)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 65ம், இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100806/81.